# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 91 /2018

| | | | |
|---|---|---|---|
| எதிரி தரப்பு சாட்சி | 1 | நாள் | 19.06.2025 |
| பெயர் | அப்துல் கபூர் | கிராமம் | NO:2 கடலங்குடி |
| தந்தை பெயர் | முகமது இஸ்மாயில் | தொழில் | பெட்டிக்கடை வியாபாரம் |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | 57./25 |

(எதிரி ஆஜர். எதிரி தானே ஒரு தரப்பினராக முன்னிலையாகி சாட்சியை விசாரித்தார். )

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் முதல் விசாரணை**

நான் 2/236 A, மேலத்தோப்பு தெருவில் வசித்து வருகிறேன். நான் பெட்டிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரரையும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களையும் தெரியும். அவர்கள் இருவருக்கும் இடையே உரிமையியல் வழக்கு சொ்து சம்பந்தமாக சுமார் 20 வருடங்களாக நடந்து வருவது எனக்கு தெரியும். 08.06.2017 அன்று ஹபீப்ஜான் மணல்மேடு காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் குற்றஞ்சாட்டப்பட்ட ஹாஜிமுகமது மற்றும் அவரது மனைவியையும் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரிதான். நான் அதை கேள்விப்பட்டு நான் மணல்மேடு காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கு ஹபீப்ஜானுக்கு ஆதரவாக ஆய்வாளர் குற்றஞ்சாட்டப்பட்ட 1ம் நபர் மற்றும் அவரது மனைவியிடம் ஆவணங்களில் கையொப்பம் பெற்றார் என்றால் அது சரிதான். நாங்கள் நாலு ஐந்து பேர் போய் கேட்டபோது மரியாதையாக வெளியே போய்விடுங்கள் இல்லையென்றால் உங்கள் மீது வழக்கு போட்டுவிடுவோம் என்று சொன்னார்கள். உடனே நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். நான் பிறகு போய் தெருவில் விசாரித்தபோது போலிசார் சொன்னதுபோல் சம்பவமே நடக்கவில்லை ஆனால் போலிசார்

வந்து அழைத்து சென்றது உண்மை என்று சொன்னார்கள். குற்றஞ்சாட்டப்பட்ட 1ம் நபரின் வீட்டை ஹபீப்ஜானுக்கு ஆதரவாக போலிசார் வந்து வீட்டை இடித்தது தெரியுமா என்றால் தெரியும். ஆரம்பத்தில் இருந்து குற்றஞ்சாட்டப்பட்ட 1ம் நபரை அந்த வீட்டில் இருந்து காலி செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த வழக்கு போட்டார்கள். ஹபீப்ஜான் போட்ட வழக்கு பொய்யானது.

அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 91 /2018

| | | | |
|---|---|---|---|
| எதிரி தரப்பு சாட்சி | 2 | நாள் | 19.06.2025 |
| பெயர் | ஜெய்சங்கர் | கிராமம் | No: 2, கடலங்குடி |
| தந்தை பெயர் | R. கோவிந்தராஜ் | தொழில் | கொத்தனார் |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | 50 |

(எதிரி ஆஜர். எதிரி தானே ஒரு தரப்பினராக முன்னிலையாகி சாட்சியை விசாரித்தார். )

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் முதல் விசாரணை**

நான் விநாயகர் கோவில் தெருவில் வசிக்கிறேன். நான் கட்டிட மேஸ்திரியாக பணியாற்றி வருகிறேன். எனக்கு இந்த வழக்கின் புகார்தாரரையும் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களையும் சுமார் 20 ஆண்டுகளாக தெரியும். அவர்களுக்கு சுமார் 20 ஆண்டுகளாக உரிமையியல் வழக்கு நடந்து வருகிறது. ஹபீப் ஜான் கொடுத்த புகார் சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்ட நபரையும் அவர் மனைவியையும் அழைத்து சென்றார்கள். இந்த வழக்கு பொய்யானது. 10.05.2010 அன்று 1 மற்றும் 2 எதிரிகள் ஹபீப்ஜானை அரிவாளால் வெட்ட வந்ததாக சொல்வது சரியல்ல. நானும் மணல்மேடு காவல் நிலையத்திற்கு போனேன். 08.06.2010 அன்று போலிசார் எங்களை விரட்டியதால் நானும் வெளியே வந்துவிட்டேன். சம்பந்தப்பட்ட வீட்டில் இப்போதும் ஹபீப் ஜான் என்பவர்தான் குடியிருந்து வருகிறார். எங்கள் தெருவில் சுமார் 50, 60 வீடுகள் அருகருகே உள்ளன அதனால் எந்த சம்பவம் நடந்தாலும் எல்லோருக்கும் தெரியும். குற்றஞ்சாட்டப்பட்ட 1ம் நபரும் 2ம் நபரும் புகார்தாரரை வெட்டவந்ததாகவும் உடனே அவர்கள் சத்தம் போட்டதாகவும் சொல்வது பொய். சம்பவ இடத்திற்கு மணல்மேடு போலிசாரே வரவில்லை.

ஜெய்சங்கர்

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் மீது பொய் வழக்கு போட்டுள்ளார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை